**CC**.**NO**.809/2023

**எதிரி ஆஜர்**

**அ.சா.1 சாந்தி, எம்.பி.எண்.3/2025, தேதி 3.9.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் நான்தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். புகாரை நான் தட்டச்சு செய்து காவல்நிலையத்தில் கொடுத்தேன். சம்பவம் நடந்தது 5.5.2022 என்றால் சரிதான். நான் அன்றைய தினமே புகாரை காவல்நிலையத்தில் சென்று கொடுத்துவிட்டேன். நான் 11.5.2022 ம் தேதியன்று இந்த சம்பவம் சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான், 5.5.2022 அன்று கொடுத்த புகாருக்கு 11.5.2022 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். நான் இவ்வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகாரை காலதாமதமாக கொடுக்கவில்லை. நான் வழக்கறிஞர் அலுவலகம் சென்று வழக்கறிஞரிடம் விபரத்தை சொல்லி புகாரை தட்டச்சு செய்து காவல்நிலையத்தில் கொடுத்தேன்.

எனக்கும் எதிரியாகிய என் தம்பிக்கும் சிவில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உள்ள கழிவறை தனியாக உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் உள்ள கழிவறை ஆரம்பத்தில் என் தம்பிக்கு சொந்தமானது என்றால் சரிதான், தீர்ப்பிற்கு பிறகு எனக்கு சாதகமானது. பாத்ரூம் உள்ள இடம் சம்பந்தமாக முதலில் நான்தான் சிவில் நீதிமன்றத்தை அணுகினேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிரிக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது என்றால் சரிதான். நான் அதை எதிர்த்து மேல்முறையீடு செய்தேன். அதில் எனக்கு சாதகமானது. அதை எதிர்த்து எதிரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு செய்து தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

சம்பவம் நடைபெற்று 6 நாட்கள் கழித்து வழக்கறிஞர் அலுவலகம் சென்று

திட்டமிட்டு எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் இரும்புக்கம்பியின் அடையாளம் மற்றும் அளவுகள் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. சேதப்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கழிவறையில் பீங்கான் ஓடுகளை அடுத்தநாள் காவலர்கள் வந்து எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். கடப்பாறை கம்பியையும் காவலர்கள் அன்றே எடுத்து சென்றார்கள். மேற்படி விபரம் எனக்கு தெரியும். சம்பவ இடம் அருகில் சுமார் 10 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவற்றில் 2 வீட்டில் இருப்பவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும். அவர்களை போலீசார் விசாரித்து சென்றார்கள். சம்பவத்தின்போது என் வயதான தாயார் வீட்டிற்குள் இருந்தார். என் கணவரும் நானும் வீட்டிற்குள்தான் இருந்தோம். நாங்கள் சத்தம் கேட்டு சம்பவ இடம் போய் பார்த்தோம். சம்பவத்திற்கு முன்பு 10 ஆண்டுகளாக எனக்கும் எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை. நான் மேற்படி வழக்கு சம்பவத்தில் உள்ள சொத்தை கெட்ட நோக்கத்துடன் அடைய வேண்டும் என்பதற்காக முன்விரோதம் காரணமாக எதிரிக்கு எதிரிாக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எவ்வித கெட்டவார்த்தையும் பேசவில்லை என்றும், சொத்துக்களை எதையும் சேதப்படுத்தவில்லை என்றும், கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

08.10.2025 **Page No**.96/2025

**CC**.**NO**.809/2023

**எதிரி ஆஜர்**

**அ.சா.2 ராதாகிருஷ்ணன், எம்.பி.எண்.2/2025, தேதி 3.9.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

எதிரி என் மைத்துனர் ஆவார். சொத்து பிரச்சனை சம்பந்தமாக எதிரிக்கும் என் மனைவிக்கும் 10 வருடங்களுக்கு மேலாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். புகார் அளிப்பதற்கு என் மனைவியுடன் நான் காவல்நிலையம் செல்லவில்லை. சம்பவம் நடந்த 5ம் தேதியன்று மாலையே காவல்நிலையம் சென்று என் மனைவி புகார் கொடுத்துவிட்டார். 11.5.2022 அன்று என் மனைவி வழக்கு சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. 6.5.2022 அன்று போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள், அதன்பின்பும் 2, 3 முறை போலீசார் விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொல்லியதைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் என் மனைவி என் மாமியார் ஆகியோர் வீட்டிற்குள்தான் இருந்தோம். கழிவறை நாங்கள் குடியிருக்கும் வீட்டிலிருந்து சுமார் 15 அடி தொலைவில் உள்ளது.

போலீசார் விசாரித்தபோது நான் கடப்பாறை பற்றி அடையாளம் மற்றும் அளவு பற்றி சொல்லவில்லை. சம்பவ இடம் அருகில் சுமார் 10லிருந்து 15 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் அருகில் உள்ளவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள். அவர்களையும் போலீசார் விசாரித்தார்கள். எதிரி என்னை கடப்பாறை வைத்து மிரட்டவில்லை என்றும் கொலைசெய்து விடுவதாக மிரட்டவில்லை என்றும், பொய்யாக என் மனைவி எதிரிக்கு எதிராக கொடுத்த சொத்து சம்பந்தமான முன்விரோதத்தால் கொடுத்த வழக்கிற்கு பொய்யாக அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC**.**NO**.809/2023

**எதிரி ஆஜர்**

**அ.சா.3 சோளியம்மாள், க/பெ.ராமசாமி, எம்.பி.எண்.2/2025, தேதி 3.9.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆஜர் எதிரி என் மகன். கழிவறை உள்ள இடம் ஆரம்பத்தில் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரிதான். என் கணவர் 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். சொத்துக்களை என் மகளுக்கு எழுதிக்கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். எதிரிக்கு நான் சொத்துக்கள் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. பாத்ரூம் உள்ள இடத்தின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நானும் என் மகளும் எதிரியிடம் சண்டையிட்டோம் என்றால் சரியல்ல. 15 ஆண்டு காலமாக எதிரியும் நானும் பேசுவதில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான், என் மகள், மருமகன் வீட்டிற்குள் இருந்தோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தை சுற்றி சுமார் 4, 5 வீடுகள் உள்ளது. அவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியாது. சம்பவம் பற்றி தெரியாது என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ தினம் அன்றே என் மகள் காவல்நிலையத்தில் புகாரளித்துவிட்டார்.

அதன் பின்னிட்டு புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. போலீசார் 6 ம் தேதி என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொல்லியதைத்தான் நான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். ஆஜர் எதிரி என்னை கடப்பாறை வைத்து மிரட்டியதாக நான் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சிவில் வழக்கை என் மகள் தாக்கல் செய்து எதிரியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக என் மகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி பாத்ரூமை அடித்து சேதப்படுத்தவில்லை, மிரட்டவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை போலீசார் 6 ம் தேதி வந்து எடுத்து சென்றார்கள். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**